நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 180/2019

## P.W.3 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | செல்வசுரேஷ் பிரிட்டோ |
| தந்தை / கணவர் பெயர் | : | செல்வராஜ் |
| கிராமம் | : | தெற்குதிட்டபிளை |
| வட்டம் | : | விளவங்கோடு |
| மாவட்டம் | : | கன்னியாகுமரி |
| சாட்சி வரிசை எண் | : | **PW3** |
| வயது | : | 48 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 16–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.55 PM

1. நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் சம்பவயிடத்தில் இல்லை. மேட்டுர் சிறப்பு இலக்குப்டை அலுவலகத்தில் இருந்தேன். தகவல் வந்ததும் 10 நிமிடத்தில் கிளம்பி அரை மணிநேரத்தில் சம்பவயிடத்திற்கு சென்றுவிட்டோம். தகவல் கிடைக்கும்போது மாலை 06.50 மணியிருக்கும்.

2. சம்பவயிடத்திற்கு போகும்போது சுமார் 07.40 மணியிருக்கும். எங்களது அலுவலகத்தில் இருந்து நான் மற்றும் திரு. ரவிசந்திரன், வேல்முருகன், பிரபு, துரைராஜ், மற்றும் இரண்டு காவலர்கள் சென்றோம். நாங்கள் கிளம்பும்போது சம்பவயிடத்திற்கு அருகில் இருந்த வனவர் குப்புசாமி மற்றும் வனக்காப்பாளர் திரு.நல்லசிவம், வனக்காவலர் ராதா ஆகியோருக்கு தகவல் கொடுத்துவிட்டுதான் சென்றோம்.

3. நாங்கள் சம்பவயிடத்திற்கு போவதற்கு முன்பாகவே சம்பவயிடத்தில் வனத்துறையை சேர்ந்த வனவர் குப்புசாமி, வனக்காப்பாளர் நல்லவிசம், வனக்காவலர் ராதா ஆகியோர் இருந்தனர். நான் சொன்ன நபர்களை தவிர சம்பவயிடத்திற்கு, சம்பவயிடத்தில் இருந்து நாங்கள் கிளம்பும் வரை யாரும் அங்கு வரவில்லை.

4. சம்பவதன்று இரகசிய தகவல் வரும்வரை சிறப்பு இலக்குபடையை சேர்ந்த நாங்கள் அலுவலகத்தில்தான் இருந்தோம். அன்றைய தினம் அதற்கு முன்பாக வேறு எந்த ரோந்துப்பணிக்காகவும் சிறப்பு இலக்குப்பனைட சேர்ந்த அனைவரும் வெளியே சொல்லவில்லை. சம்பவம் சமயத்தில் எங்களது அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்ட பணியாட்கள் ஒரு உதவி ஆய்வாளர் மற்றும் 6 காவலர்கள் ஆவார்கள். நாங்கள் அனைவரும் சம்பவயிடத்திற்கு போனோம்.

5. நாங்கள் இரண்டு குழுவாக பிரிந்து சின்னகாவலூர் சந்து அருகருகே மறைவில் இருந்து கண்காணித்துக்கொண்டிருந்தோம். அப்போது நாய் வந்தது. ஏற்கனவே இரகசிய தகவல் நாய் மூலம் வேட்டையாடுவதாக தெரிவிக்கப்பட்டிருந்ததால் நாங்கள் அதை கவனித்து அந்த இடத்தை கண்காணிக்க தொடங்கினோம்.

6. எதிரியை நாங்கள் பார்க்கும்போது சுமார் இரவு 08.30 மணியிருக்கும். ஒரு 50 மீட்டர் இடைவெளியில் பார்த்தோம். அங்கு மின்வெளிச்சம் எதுவும் இல்லை. நிலாவொளி மட்டும் தான் இருந்தது. அது வனப்பகுதி என்றால் வனத்தை ஒட்டி காவேரி நீர்பிடிப்பு பகுதியாகும். அந்த இடம் வனத்துறையை சேர்ந்தது.

7. நான் சம்பவயிடம் என்று சொல்வது சின்னகாவல் சந்தாகும். கோவிலில்

இருந்து அந்த இடம் 100 மீட்டர் இடைவெளியில் உள்ளது. கோவிலுக்கு எந்த திசையில் என்று எனக்கு நியாபகம் இல்லை. கோவில் எந்த திசையை நோக்கி இருக்கிறது என்றால் எனக்க சரியாக நியாபகம் இல்லை. கோவில் வாசல்படியை நான் பார்க்கவில்லை. கடந்த 2012 ம் வருடம் முதல் 2017 ம் வருடம் வரை மேட்டுர் சிறப்பு இலக்குப்படை அலுவலகத்தில் நான் பணியாற்றினேன்.

8. மேற்படி சம்பவம் நடந்த பகுதிக்கு நான் அதிகமாக சென்றதில்லை. மேட்டுர் அலுவலகத்தில் இருந்து மேட்டுர், தட்டக்கரை, ஆசனூர், அந்தியூர், கடம்பூர் பகுதிகளுக்கு ரோந்து செல்வோம். நான் சொன்னவாறு உண்மையில் நான் சம்பவயிடத்திற்கு சென்றிருந்தால் கோவிலில் இருந்து எந்த திசையில் எவ்வளவு தூரத்தில் எதிரி வந்தார் என்றும் அந்த இடம் எந்த திசையை நோக்கி இருந்தது என்றும் சம்பவயிடத்தில் சின்னகாவல் திட்டு மாரியம்மன் கோவிலின் வாசல் எந்த திசையில் நோக்கி இருந்தது நான் சரியாக சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. இரவு நேரம் என்பதால் எனக்கு சரியாக தெரியவில்லை.

9. என்னை இந்த சம்பவம் தொடர்பாக வனச்சரக அலுவலர் விசாரணை செய்தார். சம்பவத்திற்கு மறுநாள் என்னை விசாரித்தார். சம்பவயிடத்தில் வைத்து அன்றே இரவு சுமார் 08.30 மணிக்கு தனியறிக்கை மற்றும் மகஜர் நான்தான் தயார் செய்தேன். எனது கைப்பட மேற்படி ஆவணங்களை நான்தான் எழுதினேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் அடர்ந்த வனப்பகுதி என்றாலும் அந்த இருளான நேரத்தில் நான் மேற்படி ஆவணங்களை சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்திருக்க வாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல. எங்களிடம் Survival kit இருந்தது. அதில் டார்ச் லைட், அளவீடு செய்யக்கூடிய டேப், சின்ன எடை மெசின் மற்றும் மருந்துப்பொருட்களை வைத்திருப்போம். அதை வைத்து மேற்படி ஆவணங்களை சம்பவயிடத்தில் வைத்துதான் தயார் செய்தோம்.

10. அதன்பிறகு எதிரியையும், பிடிப்பொருட்களையும் இரவு 10.00 மணிக்கு மேட்டுர் வனச்சரக அலுவலகத்தில் ஒப்படைத்துவிட்டு நாங்கள் சென்றுவிட்டோம். அதன்பிறகு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து எனக்கு தெரியாது. மறுநாள் வனச்சரக அலுவலர் என்னை அழைத்து விசாரணை செய்தார். வனச்சரகர் அலுவலரிடமும் நான் மேலே சொன்ன விவரங்களை தான் சொன்னேன்.

11. எதிரியின் வீட்டிற்கும் சம்பவயிடத்திற்கும் எவ்வளவு தூரம் என்று எனக்கு தெரியாது. எதிரி செட்டிப்பட்டிக்கு அருகில் உள்ள ஊஞ்சக்கோரையை சேர்ந்தவர். அந்த பகுதி வனப்பகுதி ஒட்டியது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எதிரியின் வீடு நான் சொல்லும் வனப்பகுதியை ஒட்டிய சின்ன கிராமம் என்றாலும் அந்த பகுதி மக்கள் வழக்கமாக இலை தழைகள் ஒடிப்பதற்காக வனப்பகுதிக்குள் வருவார்கள் என்றாலும் அவ்வாறுதான் சம்பவதன்று பகல் நேரத்தில் காலை சுமார் 11.00 மணிக்கு எதிரி தழை ஒடிப்பதற்காக கொடுவாளுடன் அங்கு சென்றார் என்றாலும் நாங்கள் அவரை பிடித்து ஏதோ ஒரு விலங்கு கடித்து இறந்துகிடந்த உடும்பை பயன்படுத்தி பொய் வழக்கு பதிவுசெய்துள்ளோம் என்றாலும் நான் தயார் செய்த தனியறிக்கை தவறானது என்றாலும் மேற்படி ஆவணங்கள் வனச்சரக அலுவலகத்தில் வைத்து புள்ளி விவரக்கணக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 01.30 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 180/2019

## P.W.6 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பிரகாஷ் |
| தந்தை / கணவர் பெயர் | : | கந்தசாமி |
| கிராமம் | : | மாடத்தூர் |
| வட்டம் | : | அந்தியூர் |
| மாவட்டம் | : | ஈரோடு |
| சாட்சி வரிசை எண் | : | PW6 |
| வயது | : | 57 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 16–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.31 PM

1. நான் சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரத்தில் மேட்டூர் வனச்சரகர் அலுவலகத்தில் பணிபுரியவில்லை என்றால் சரிதான். சம்பவம் எப்படி நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக வனச்சரகர் அலுவலர் சண்முகம் இறுதியறிக்கை 2014 ம் தேதி

நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்ததாக எங்களது அலுவலக கோப்பில் குறிப்பு உள்ளது. ஆனால் அந்த புகார் கோப்புக்கு எடுக்கப்படவில்லை. அது என்ன ஆனது என்று எனக்கு தெரியாது.

2. நான் ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளித்தேன் என்றாலும் சம்பவத்தை பற்றியும் எதிரியை பற்றியும் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். இந்த வழக்கு புள்ளிவிவரக் கணக்கிற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக நான் யாரையும் விசாரிக்கவில்லை.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 01.40 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**